1992 மார்ச் 26]

அரசு ஊழியர்களுக்கு வழங்குகின்ற, அரசு ஊழியர்களாக பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு வழங்குவதுபோன்ற அடிப்படையான சம்பளத்தை, தனியார் கல்லூரிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்கு அரசு ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டு வர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்கல்வி பெறுகின்ற மாணவர்கள், அந்தக் கல்விச் செலவுக்கான அந்தத் தொகையினை அவர்களே பகிர்ந்து கொள்கின்ற ஒரு முறையைதான் இப்போது தேசியக் கல்விக் கொள்கை அங்கீகரிக்கிறது ஏழை எளிய மாணவர்களுக்கு வேண்டுமானால் அரசு தான் அந்தச் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில் ஒரு சுய நிதிக் கல்லூரியோ அல்லது சுய நிதி பாலிடெக்னிக்கோ நடத்துவதற்கு என்ன செலவாகும் என்பதைப் பார்த்து, அதிலே சேர்ந்து படிக்கின்ற மாணவர்கள் அந்தச் செலவைப் பகிர்ந்து கொள்கிற அளவிற்கு ஒரு முறையை வகுப்பதற்காகப் பல்கலைக் கழக மானியக் குழு, அகில இந்திய தொழில் நுட்பக் கழகம், மத்திய அரசு, மாநில அரசு போன்றவைகள் கருத்தைச் செலுத்தி ஆராய்ந்து வருகின்றன. அப்பொழுது ஒரு நல்ல முறையை வகுக்க முடியும் என்று நான் நம்புகிறேன். அது வரைக்கும் அதிகத் தொகைகளை வாங்கி மாணவர்களைச் சேர்க்கின்ற முறையைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியிலே அரசு ஈடுபடும். ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், அரசாங்கக் கல்லூரிகளிலே அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளிலே என்ன சம்பளம் தரப்படுகிறதோ அதே சம்பளம்தான் இந்தச் சுய நிதிக் கல்லூரியிலும் தர வேண்டும் என்று அரசு விரும்புகிறது. அதையும் அமல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

முற்பகல் 9—55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 361, திரு. கே. முனிவெங்கடப்பன்—மாண்புமிகு கல்வி அமைச்சர்.

361—

நூலகங்களில் ''நமது எம்.ஜி.ஆர்.'' நாளிதழ்.

* 9375 திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொது மக்கள் விரும்பிப் படிக்கும் ''நமது எம்.ஜி.ஆர்.'' நாளிதழ் எல்லா நூலகங்களிலும் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் கிடைக்கும்?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1992 மார்ச் 26]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1991-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நூலக ஆணைக் குழுக்களின் நூலகங்களுக்கு ''நமது எம்.ஜி.ஆர்.'' நாளிதழ் வாங்கப்பட்டு வருகிறது.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செய்தித்தாள்கள் என்பது உண்மையான செய்திகளை உரிய முறையில் மக்களுக்குக் கொடுப்பதாகும். இன்றைக்குச் செய்தித்தாள்கள் இலக்கணப்படி, இலக்கணத்திற்கேற்ப உண்மையான செய்திகளை முறைப்படி தந்து கொண்டிருக்கும் இந்தியத் துணைக்கண்டத்திலேயே வல்லமை படைத்த முதலமைச்சராக, இறையுள்ளம் கொண்ட முதலமைச்சராக, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கரங்களால் வெளியிடப்பட்ட ''நமது எம்.ஜி.ஆர்.'' செய்தித்தாளானது, குறிப்பாக எல்லா பொது நூலகங்களுக்கும், குறிப்பாக கிராமப்புறங்களிலே இருக்கும் நூலகங்களுக்கும் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கேள்விக்கு ஏற்கனவே இந்தத் தேதியிலிருந்து வழங்கப்படுகிறது என்று அறிவித்திருக்கிறார். அமைச்சருடைய பதிலைக் கேட்டு நீங்கள் கேள்வி கேட்க வேண்டும். 11 ஆம் மாதத்திலிருந்து வழங்கப்படுகிறது என்று அறிவித்ததற்குப் பிறகு, வழங்கப்படுமா என்று இன்னொரு கேள்வி கேட்டால் சரியாக இருக்காது. திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எல்லா நூலகங்களுக்கும் அளிக்கப்படுகிற ''நமது எம்.ஜி.ஆர்.'' பத்திரிகை எவ்வளவு என்பதனையும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முரசொலி பத்திரிகை அனைத்து கிராமங்களுக்கும் செல்லுகின்றன. அதுபோன்று உள்ளாட்சித் துறையில் அனைத்து ஊராட்சி மன்றங்களும் இதை வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்கப்பட வேண்டும்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சத்துணவு கொடுத்து, இலட்சக்கணக்கான ஏழை மாணவர்களைக் கல்வி பயிலச் செய்திருக்கும் பொன்மனச்

செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரைத் தாங்கி வருகின்ற அந்த நாளிதழை எல்லாப் பள்ளிக்கூட நூலகங்களுக்கும் அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது நூலகங்களுக்கு வாங்கு மாறு ஆணை இடப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கு; பள்ளிக் கூடங்களே, அவர்களேதான் முடிவெடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 362. டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர்,

362—

அரசு மருத்துவமனைகளுக்கு தரமுள்ள மருந்துகள் கொள்முதல்.

* 1238 டாக்டர் மு. சீனியம்மாள் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு மருத்துவமனையில் அளிக்கப்படும் மருந்துகள் தரமுள்ள நிறுவனங்களிலிருந்தே கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்பதை அரசு அறிவுறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் மருந்துகள் அனைத்தும் தரமுள்ள நிறுவனங்களிலிருந்தே கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைரவரவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட மருத்துவ மனைகள், தாலூக்கா மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் பேரூராட்சி மருத்துவ மனைகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற மாத்திரைகள் மருந்துகள் பர்ச்சேசிங் கமிட்டி மூலம் அனுமதி பெற்ற பின்னர்தான் எல்லா மருத்துவமனைகளுக்கும் கொடுக்கப் படுகின்றது. பெரும்பாலும் அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்கள் எவ்வளவு நல்ல வைத்தியம் செய்தாலும் கொடுக்கப்படுகின்ற மருந்துகளினுடைய தரம் வீரியம் குறைவாக இருந்தால் மக்களுக்குச் செய்கின்ற பலன் முழுமை